ஆறுபடை வீடுகளும் பழமுதிர்சோலையும்

முருகக் கடவுள் வீற்றிருக்கும் தலங்களில், ஆறு தலங்களை இணைத்து 'ஆறுபடை வீடுகள்' என வழங்கிவருகின்றனர். முருகன் ஆறுபடை வீடுகளுக்கு உரியவன் என்பது தமிழர்களின் ஆழ்ந்த நம்பிக்கை. பரங்குன்றம், அலைவாய்(திருச்செந்தூர்), ஆவிநன் குடி (பழனி), ஏரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை (அழகர் கோயில்) ஆகிய ஊர்களை ஆறுபடை வீடுகள் என்பர். சங்க இலக்கியங்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படையினையே இக்கருத்துக்கு முதற் சான்றாகக் காட்டுவர்.[1] குன்றுதோறாடலை விடுத்துத் திருத்தணியைச் சேர்த்துக் கூறும் வழக்கமும் உண்டு. இக்கருத்திலமைந்த வண்ணப்படங்களையும் (Lithographs) தமிழ்நாட்டில் நிறையவே காணலாம்.

முதல் மூன்று தலங்களும் இன்றளவும் முருகன் கோயிலை உடையவனாக விளங்குகின்றன. குன்றுதோறாடல், பழமுதிர் சோலை ஆகிய இரு தலங்களும் பல ஐயப்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலப்பதிகார அரும் பதவுரையாசிரியர், குடந்தைக்கருகில் உள்ள சுவாமிமலையை 'வெண்குன்றம்' என்று குறிக்கிறார்.[2] 15 ஆம் நூற்றாண்டினரான அருணகிரிநாதர் அதையே 'ஏரகவெற்பெனும் அற்புதமிக்க சுவாமிமலைப் பதி' என்று குறிக்கிறார்.[3] அருணகிரிநாதருக்கு முன் சுவாமிமலையே திருவேரகம் என்று குறிப்பதற்குக் கல்வெட்டு, இலக்கியச் சான்றுகள் ஏதும் இல்லை. வெண்குன்றமும் திருவேரகமும் இரண்டு ஊர்கள் எனச் சிலப்பதிகாரம் தெளிவாகக் குறிக்கிறது.[4]

குமரி மாவட்டத்தில் தக்கலைக்கு அருகில் உள்ள குமாரபுரமே திருவேரகம் என்பது சிலர் கருத்து.[5] நெல்லை மாவட்டத்தில் உள்ள வள்ளியூர்தான் திருவேரகம் என்று இன்னும் சிலர் கருதுகின்றனர்.[6] டாக்டர் மா. இராசமாணிக்கனார், 'தென்கன்னட மாவட்டத்தில் புத்தூர் வட்டத்திலுள்ள குமாரபர்வதமே திருவேரகம்' என்கிறார்.[7]

குன்றுதோறாடல் என்ற தலம் எங்கிருக்கிறது என்று இதுவரை யாரும் கண்டறியவில்லை. பழமுதிர்சோலை என்னும் தலம்

மதுரைக்கு அருகிலுள்ள அழகர்கோயிலே என்ற கருத்து மக்களிடையே நிலவுகிறது. 14ஆம் நூற்றாண்டினரான கந்தபுராண ஆசிரியர் பழமுதிர்சோலை என்பது ஒரு முருகன் தலம் என்பது போலத் தம் நூற்பாயிரத்தில் பாடுகிறார்.[8] 15ஆம் நூற்றாண்டினரான அருணகிரிநாதரும் இச்சோலைமலையே பழமுதிர்சோலைமலை என்று கருதிப் பாடியுள்ளார்.[9] இவைதவிரப் பழமுதிர்சோலை என்பது அழகர் கோயிலே; அது முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்று என்ற கருத்துக்கு ஆதரவாக வேறு சான்றுகள் எதுவும் இல்லை.

பரங்குன்றம், அலைவாய், ஆவிநன்குடி, திருவேரகம் ஆகிய நான்கு மட்டுமே திருமுருகாற்றுப்படை குறிப்பிடும் முருகன் தலங்கள் என்று இராசமாணிக்கனார் கருதுகிறார். குன்றுதோறாடல் என்ற சொல்லுக்கு, 'முருகன் மலைதோறும் ஆடல் கொண்டவன்' என்பது அவர் கொண்ட பொருளாகும்.[10] 'குன்றுதோறாடல்' எனுந் தலைப்பில் அமைந்த திருப்புகழ்ப் பாடல்கள் ஐந்தும்,

> ''பல குன்றிலும மர்ந்த பெருமாளே''
> ''பல மலையுடைய பெருமாளே''
> ''மலை யாவையும் மேவிய பெருமாளே''
> ''குன்று தோறாடல்மேவு பெருமாளே''

என்றே முடிகின்றன.[11] இதை நோக்கியபின் இராசமாணிக்கனாரின் முடிவுக்கு நாமும் வருதல் வேண்டும். 'குன்றுதோறாடல்' என்னும் பெயரோடு ஒரு முருகன் தலம் இருந்ததாக வாதாட இயலாது.

'பழமுதிர்சோலைமலை கிழவோன்' என்று முருகனைச் சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படை பாடுகிறது.[12] 'பழமுதிர்சோலை என்பது ஒரு முருகன் தலம்; அது அழகர்மலையில் இருந்தது' என்ற கருத்துடையவர்கள் அதையே சான்றாகக் காட்டுகின்றனர். ஆனால் இராசமாணிக்கனார் பழமுதிர்சோலை எனப்படும் அழகர் மலையில் முருகன் கோயில் இருந்ததில்லை என்று கருதுகிறார்.

முருகாற்றுப்படை பாடிய நக்கீரரைத் தவிரச் சங்கப் புலவர் வேறு பலரும் மதுரைக்கருகிலுள்ள முருகன் தலமான திருப்பரங் குன்றத்தைப் பாடியுள்ளனர். ஆனால் பழமுதிர்சோலை பற்றிய

செய்தியோ குறிப்போ முருகாற்றுப்படை தவிர வேறு எந்தச் சங்க இலக்கியத்திலும் இல்லை. 'மதுரைக்கருகில் உள்ள அழகர்மலைப் பகுதியில் இப்புலவர்கள் (சங்கப் புலவர்கள்) காலத்தில் திருப்பரங் குன்றத்தைப் போல் முருகன் கோயில்கொண்ட மலை ஒன்று இருந் திருக்குமாயின் இப்புலவர்கள் அதனைப் பாடாது விட்டிருப்பார் களோ?' என்ற கேள்வியின் மூலம் தன் கருத்தை இராசமாணிக்க னார் தெளிவாக்குகிறார்.[13]

இருப்பினும் இச்சிக்கல் இன்னும் ஓய்ந்தபாடில்லை. அழகர் கோயில் என்னும் பழமுதிர்சோலை முருகன் தலமே என்றும், இன் றுள்ள திருமால் கோயிலே முருகன் கோயில்தான் என்ற கருத் துப்படவும் 'பழமுதிர்சோலை' என்ற பெயரோடு ஒரு நூலே வெளி வந்துள்ளது.[14] இந்நூலின் கருத்துக்களை ஆராய்வதற்குமுன் வேறு சில கேள்விகளும் எழுகின்றன.

திருமுருகாற்றுப்படை முருகனது ஆறுபடை வீடுகளைக் குறிப் பதானால், 'முருகன் ஆறுபடை வீடுகளுக்கு உரியவன்' என்ற கருத்து அந்நூலில் ஓரிடத்தில்கூட இல்லையே, ஏன்? ஒவ்வொரு தலமாக விரித்துச் சொல்லும் நக்கீரர் 'ஆறு' என்ற எண்ணுப் பெயரை ஓரிடத்தில் குறிக்கவில்லை என்பதையும் எண்ணவேண்டும்.

'படைவீடு' என்ற சொல் போர்வீரர் படை தங்கியிருக்கும் இடத்தைக் குறிப்பதாகும். இதனைப் 'பாடிவீடு' என்று குறிப் பிடுவதும் உண்டு. நெல்லை மாவட்டத்தில் தாமிரவருணி ஆற்றங் கரையில் உள்ள 'மணற்படைவீடு' என்னும் ஊர் பாண்டியர் படை தங்கியிருந்த இடமாகும். தஞ்சை மாவட்டத்தில் குடந்தைக்கருகில் ஆரியப்படையூர், பம்பைப்படையூர் என்ற இரண்டு ஊர்கள் உள்ளன. இவற்றுக்கருகில் உள்ள 'பழையாறு' எனப்படும் பழையாறை, பிற் காலச் சோழர்களின் இரண்டாம் தலைநகராக இருந்தது. எனவே இவ்விரண்டு படையூர்களும் சோழர்களின் படைகள் தங்கியிருந்த டைவீடுகளாகும்.

முருகன், அலைவாய் எனப்படும் திருசெந்தூரில் சூரபதுமனைப் போரிட்டு அழித்தான். எனவே அது 'படைவீடு' எனப்படும் தகுதி பெற்றது. பரங்குன்றிலோ, ஆவிநன்குடியிலோ, திருவேரகத் திலோ முருகன் போர்க்கோலம் கொண்டதாகவோ போரிட்டதாகவோ எவ்வகையான புராணச் செய்திகளும் இல்லை. அப்படியாயின் அவற்றைப் படைவீடு என்று அழைப்பது எப்படிப் பொருந்தும்?

'மாடமலி மறுகிற் கூடற் குடவயின்' (மாடங்கள் நிறைந்த மதுரைக்கு மேற்கே) திருப்பரங்குன்றம் உள்ளது என்று முருகாற்றுப்படை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. பழமுதிர்சோலை எனப்படுவது அழகர்மலை என்பது உண்மையானால் அது மதுரைக்கு வடக்கே அல்லது வடகிழக்கே உள்ளது என்றும் முருகாற்றுப்படை குறித்திருக்கவேண்டும். அப்படிக் குறிக்கவில்லையே, என்?

பெரும்பாறையாக இன்று விளங்கும் திருப்பரங்குன்றத்தை 'மந்தியும் அறியா மரம்பயில் அடுக்கம்' என்றும், 'அரமகளிர் ஆடும் சோலைகளை உடையது' என்றும் முருகாற்றுப்படை வருணிக்கிறது. அழகர்மலையே பழமுதிர்சோலையானால் இன்றளவும் நீரோடும் சிலம்பாற்றை (நூபுரகங்கையை) நக்கீரர் குறிக்காமல் விடுவாரோ? சங்க இலக்கியங்களில் மற்றொன்றான பரிபாடல் சிலம்பாற்றையும் குறிப்பிட்டு அம்மலையை 'மாலிருங்குன்றம்' என்றும் தெளிவாகக் குறிக்கிறது.[15] சங்க இலக்கியங்களுக்குச் சற்றே பிற்பட்ட சிலப்பதிகாரம் சிலம்பாற்றையும் குறித்து இம்மலையைத் 'திருமால் குன்றம்' என்றும் கூறுவதும் இங்கு எண்ணவேண்டிய செய்தியாகும். பரிபாடல் 'பரங்குன்றத்தை முருகன் தலம் எனப் பாடுகிறது. ஆனால் பழமுதிர்சோலையைக் குறிக்கவில்லை. மாறாக, 'மாலிருங்குன்றத்தில் பலராமனும் திருமாலும் சொல்லும் பொருளுமாக விளங்குகின்றனர்' என்று பாடுகின்றது.[16]

அலைவாயினை அதே பெயரோடு புறநானூற்றுப் பாடல் ஒன்றும், தொல்காப்பியம் களவியல் உரை மேற்கோள் பாடல் ஒன்றும் குறிக்கின்றன. புறநானூற்றின் 55ஆம் பாடல், 'வெண் தலைப் புணரி அலைக்கும் செந்தில்' எனக் குறிக்கிறது. அகநானூற்றின் இரண்டு பாடல்கள் (1, 61) 'பொதினி' என்ற பெயரால் ஆவிநன்குடியைக் குறிக்கின்றன. சிலப்பதிகாரம் திருவேரகத்தை முருகன் தலம் என்றே குறிக்கின்றது. ஆனால் குன்றுதோறாடலும் பழமுதிர்சோலையும் பதினைந்தாம் நூற்றாண்டினரான அருணகிரிநாதர் காலம்வரை வேறு எந்த இலக்கியங்களிலும் குறிக்கப்படவில்லை.

செந்தில், செங்கோடு, வெண்குன்றம், ஏரகம் ஆகிய முருகன் தலங்களைக் குறிக்கும் சிலப்பதிகாரம், முருகன் ஆறுபடை வீடுகளுக்கு உரியவன் என்று எங்குமே பேசவில்லை.

பழமுதிர்சோலை அழகர்மலையில் உள்ளதாக அருணகிரிநாதர் தம்காலத்து நிலவிய மக்களின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே பாடினார். தான் செல்லாத தலத்தைப் பாடுவாரா? என்ற கேள்வி எழுவது இயற்கை. காணாத ஒன்றையும் பாடுவது பக்தி உலகில் இயற்கையே. இலங்கையில் உள்ள திருக்கேதீச்சுரத்துக்குச் செல்லாத திருநாவுக்கரசர், தேவாரத்தில் அதைப் பாடியுள்ளார். அதுபோலவே திருக்கயிலாயத்தைத் தேவார மூவரும் பாடியுள்ளமையும் நினையத்தக்கது.

அருணகிரிநாதரின் திருப்புகழிலும், முருகன் ஆறுபடை வீடுகளுக்கு உரியவன் என்ற கருத்தை எங்கும் காணவில்லை. 'குன்றுதோறாடல்' என்ற தலைப்பில் அமைந்த பாடல்களிலும் அந்தப் பெயரோடு ஓர் ஊர் இருந்ததாக அருணகிரிநாதர் பாடவேயில்லை.

அப்படியானால், பழமுதிர்சோலைமலை என்ற முருகாற்றுப் படையின் ஈற்றடிக்கு எவ்வாறு பொருள் கொள்வது? "திருமுருகாற்றுப் படை 'பழமுதிர்சோலைமலைக் கிழவோனே' என்றது கொண்டு பழமுதிர்சோலை என்ற ஒரு திருப்பதி முருகனுக்கு உரியதாகக் கூறுவதுண்டு. நச்சினார்க்கினியர் உரையால் அப்படியொரு திருப்பதி இருந்ததென அறிய இயலவில்லை. முருகாற்றுப்படையின் சொல்லமைப்பும் அதனை வலியுறுத்தவில்லை" இவ்வாறு கூறும் ஔவை சு.து.[17] அடுத்து ஓர் ஐயத்தைக் கிளப்புகிறார்.

"திருமாலடியார் திருமாலிருஞ்சோலை என்கின்றனர். அவர்கள் சோலைமலை என வழங்குவதும் முருகாற்றுப்படை 'பழமுதிர் சோலைமலை' என வழங்குவதும் ஒத்திருப்பது பற்றி இவ்வாறு கோடற்கு இடமுண்டாகிறது. இதுவும் நன்கு ஆராய்தற்குரியது" என்கிறார்.[18] முருகாற்றுப்படையின் சொல்லமைப்பு எதனை வலியுறுத்தவில்லை என்றாரோ அதனை அந்த முருகாற்றுப்படையின் சொல்லமைப்பினையே நம்பி ஆராயவேண்டும் என மறுவினாடியே கூறுகிறார். ஏன் இந்த முரண்பாடு?

இவருடைய ஐயத்துக்கு இராசமாணிக்கனார் பின்வருமாறு விடை கூறுகிறார்

"திருமுருகாற்றுப்படையைக் கூர்ந்து கவனிப்பின், அதன் ஈற்றடியாகிய 'பழமுதிர்சோலைமலை கிழவோனே' என்பது எழுவாயாக அமைந்திருத்தலைக் காணலாம்......'பழமுதிர்குன்று' என்னும் தொடர்

நற்றிணையில் (78) வந்துள்ளது. அதுபோலவே திருமுகாற்றுப் படையில் 'பழமுதிர்சோலைமலை' என்பது குறிக்கப்பட்டுள்ளது' என்று விளக்குவதோடு[19], "பழமுதிர்சோலை என ஒரு மலை முருகனுக்கு உரியது என்பதற்கோ, அம்மலை அழகர்மலையே என்பதற்கோ அங்கு முருகன் கோவில் இருந்தது என்பதற்கோ சங்க நூல்களிலும் இடைக்காலக் கல்வெட்டுக்களிலும் சான்று இல்லை" என்று மேலும் தெளிந்த முடிவினைக் கூறுகிறார் இராசமாணிக்கனார்.[20]

அப்படியானால், 'ஆறுபடைவீடு' என்ற வழக்கு எப்படி வந்தது? நக்கீரர் பாடிய ஆற்றுப்படை இலக்கியம் முருகனது வீடு மலைக் (தலங்களை) குறித்தது. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவிநன்குடி, திருவேரகம் ஆகியன நாக்கீரர் காட்டும் ஆற்றுப்படை வீடுகளாகும். 'ஆற்றுப்படைவீடு' என்னும் சொல்லே மக்கள் வழக்கில் 'ஆறுபடைவீடு' எனத் திரிந்தது. எனவேதான் முருகாற்றுப்படையில் வரும் குன்றுதோறாடல், பழமுதிர்சோலை லலை என்னும் இரண்டு சொற்களையும் இரண்டு முருகன் திருப்படுகளின் பெயர்கள் என்று தவறாகக் கருத இடமேற்பட்டது.

பதினான்காம் நூற்றாண்டினரான கந்தபுராண ஆசிரியர் திருமுருகாற்றுப்படை கூறும் பரங்குன்றம் அலைவாய், ஆவிநன்குடி, ஏரகம் ஆகியவற்றைப் போலக் குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய தொடர்களும் இரு முருகன் தலங்களின் பெயர்கள் என்று கொண்டு, தம் நூற்பாயிரத்தில்,

"திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவோம்"
"சீரலை வாய்வரு சேயைப் போற்றுவோம்"
"ஆவினன் குடிவரும் அமலற் போற்றுவோம்"
"ஏரகத் தறுமுகன் அடிகள் ஏத்துவோம்"
"குன்றுதோ றாடிய குமரற் போற்றுவோம்"
"பழமுதிற் சோலையம் பகவற் போற்றுவோம்"

என்று பாடுகிறார்.[21] பதினைந்தாம் நூற்றாண்டினரான அருணகிரிநாதரும் இக்கருத்தினை அடியொற்றிப் பழமுதிர்சோலை என்றொரு முருகன் தலம் சோலைமலை (அழகர்மலை)யிலே இருந்ததாகப் பாடுகிறார். இத்தவறான கருத்தின் அடிப்படையில்தான் இன்றிருக்கும் அழகர்கோயிலே பழமுதிர்சோலை எனச் சிலர் வாதிடமுற்பட்டனர்.

'பழமுதிர்சோலை' எனும் பெயரிய நூலின் கருத்துக்கள் ஆய்வு முடிவுகள் என்றோ, உண்மை கண்டறியும் முயற்சி என்றோ ஏற்கப்படவியலாதவை. இருப்பினும் அவற்றைத் திறனாய்தல் நமது கடமையே.

தாண்டவமூர்த்தி ஓதுவார் என்பாரால், 'குமரகுருபரன்' இதழில் (1953), 'கல்லழகர்' என்னும் தலைப்பில் எழுதப்பட்ட ஒரு கட்டுரை, 'அழகர்கோயிலைப் பற்றிய ஆராய்ச்சிக்குறிப்பு' என்னும் தலைப்போடு இந்நூலில் (1961) பிற்சேர்க்கையாகத் தரப் பட்டுள்ளது.

இந்நூல் தரும் கருத்துக்களை இனி நோக்குவோம் :

1. "அழகர்கோவிலிலுள்ள மூலவாண்டவர்க்குக் கல்லழகர் என்பது திருநாமம். மலையலங்காரன் என்ற நாமம் அதைப் பின்பற்றி அமைந்தது. கள்ளர் நாட்டிலிருப்பதால் கள்ளழகர் என்றும் வழங்கி வருகிறது. புராதன ரிக்கார்டுகளில் கள்ளழகர் என்று இருந்து வருகிறது. மூலாண்டர் உட்புறம் கல்லாகாரமாகச் சங்கு சக்கர மின்றி இருந்ததைப் பிற்காலம் அரிகேசரி பாண்டியன் என்பவனால் சாந்தாகாரப் ஆக்கிப் பிரயோக சக்கிரதாரியாக விளங்கி வருகிறார்'' (ப. 78).

கல்லழகர் என்ற பெயருக்கும், பாண்டியன் ஒருவன் சாந்தாகாரம் ஆக்கியதற்கும் சான்றுகளைக் கட்டுரையாளர் தரவில்லை. எனவே வரலாற்றுணர்வோடு இவற்றை ஏற்கமுடியாது.

கல்லழகர் என்ற பெயரைப் பின்பற்றி மலையலங்காரன் என்ற பெயர் அமைந்ததாகக் கூறுவதும் ஒரு கற்பனையே. அழகர்', 'அலங்காரன்' என்ற இரு சொற்களும் ஒருபொருள் தருவன அல்ல. 'மலையலங்காரன்' என்ற பெயர், 'அழகர் அலங்காரன் மலை' என்ற பெரியாழ்வாரின் பாசுரத்தால் அமைந்த தென்று கொள்வதே பொருத்தம்.

2. "மேற்படி கோயில் மூலஸ்தானத்திலேயே 'சோலைமலைக் குமரன்' என்ற வெள்ளி விக்ரஹம் இருந்துவருகிறது"(ப. 80).

இத்திருமேனியின் பெயர் 'சோலைமலைக்கரசர்' என்பதே சரியான செய்தியாகும். 'ஏறு திருவுடையான்', 'சுந்தரத்தோளுடையான்' என இக்கோயிலின் பிற திருமேனிகள் பாசுரப் பெயர்களை

பெற்றது போலவே இந்திருமேனியும், 'சோலைமலைக்கரசே என் கண்ணபுரத்தமுதே' என்ற பெரியாழ்வார் பாசுரத்தினால் பெயர் பெற்றது.

3. 'ஆறுமுகப் பெருமான் திருக்கோயில் சுவாமிகளுடன் பன்னிருகை ஆறுமுகத்துடன் பதினெட்டாம்படிக்குத் தென்புரம் மலையின்மீது தனிச்சந்நிதியாக இருந்ததாகவும், தெற்குக் கோட்டை வாசலுக்கு எதிர்ப்புறம் ராயகோபுரம் உள் வாசலுக்கு எதிரில் இருந்ததாகவும் பழமொழியாகச் சொல்கிறார்கள்'' (ப. 86).

வழக்கு மரபினை (oral tradition) மட்டுமே ஆதாரமாகக் கொள்ள இயலாது. இக்கோயிலில் தொல்லியல் ஆய்வுத்துறையினரால் படியெடுக்கப்பெற்ற 223 கல்வெட்டுக்களிலும் இவ்வாறு ஒரு கோயில் இருந்ததற்கான சிறுகுறிப்புக்கள்கூட இல்லை.

4. மலைமீது சிலம்பாற்றுக்கு அருகிலுள்ள ஒரு மண்டபத்தில் 1960இல் முருகன் கோயில் கட்டப்பட்டது. இம்மண்டபத்தில் முன் ஒருகாலத்தில் முருகன் கோயில் இருந்தது எனவும் கட்டுரையாளர் (1953) குறிப்பிடுகிறார் (ப. 81).

முருகன் கோயில் கட்டப்பட்ட இவ்விடம் பழமுதிர்சோலை எனவும் பெயரிடப்பெற்றது. இது தொடர்பாக வைணவ சமயத்தார் தொடர்ந்த வழக்கில் 1967இல் சென்னை உயர்நீதி மன்றம் இவ்வாறு தீர்ப்பளித்தது :

''இம்மண்டபம் வழக்கிற்கு முன்னிருந்தவாறு சோலைமலை மண்டபம் அல்லது புளிக்குமிச்சான்மேடு அல்லது சாம்பல்புதூர் மண்டபம் என்றே அழைக்கப்படவேண்டும். பழமுதிர்சோலை முதலிய பிற புதிய பெயர்களால் அழைக்கப்படக்கூடாது.''[22] மேலும் இம் மண்டபம் அழகர்கோயிலின் சொத்தே என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

மலை வழியினையும் வழியிலுள்ள மண்டபங்களையும் நோக்குவார்க்கு, ஐப்பசி மாதத்தில் அழகர் தொட்டி உற்சவத்துக்காக மலைமீது செல்லும்போது தங்கி இளைப்பாறும் பல மண்டபங்களில் ஒன்றாகவே இது இருந்திருக்க வேண்டும் என்பது புலப்படும்.

5. இக்கோயிலுக்கு ஒரு மைல் கிழக்கே மலையிலுள்ள ஒரு குகையினை 'நக்கீரர் குகை' எனக் குறிப்பிட்டு, ஒரு பூதத்தால் இங்கு அடைக்கப்பட்ட நக்கீரரை முருகன் சிறைமீட்டான் என்பது

செவிவழிச் செய்தியாக வழங்குவதாகவும் கட்டுரையாளர் கூறுகிறார் (ப. 86).

'அழகர்மலைக் கல்வெட்டுக்கள்' எனப் புகழ்பெற்ற தமிழி (பிராமி) கல்வெட்டுகள் உடைய இக்குகை சமணத்துறவிகளின் இருப்பிடம் என்பது வரலாற்றறிஞர் முடிவு. பிற சமணக்குகைகளைப் போலவே இக்குகையும் கற்படுக்கைகளை (rock cut beds) உடையதே. சமணத்துறவி ஒருவரின் புடைப்புச்சிற்பமும் அதன் கீழ் 'அச்சணந்தி செயல்' என்றொரு சிறிய வட்டெழுத்துக் கல்வெட்டும் இங்கு உள்ளன. எழுத்தமைதிகொண்டு இவ்வட்டெழுத்துக் கல்வெட்டின் காலம் கி.பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டு ஆகலாம் என்பர் பி.பி. தேசாய்.[23]

எனவே இந்த ஆய்வுக்கட்டுரை வலியுறுத்தும் கருத்துக்கள் இவைதாம் :

1. அழகர்கோயில், பழமுதிர்சோலை என்ற பெயரில் முருகன் திருப்பதியாக இருந்ததில்லை.

2. தமிழ்நாட்டில் முருகன் திருப்பதிகள் சங்க காலத்திலும் நிறைய இருந்தன. ஆனால் 'ஆறுபடைவீடு' என்பது மக்களிடையே பிறந்த நம்பிக்கைதான்; வரலாற்று உண்மையன்று. முருகாற்றுப் படையின் அடிகளுக்குத் தவறான பொருள் கண்டதால் இந்த நம்பிக்கை வளர்ந்தது.

குறிப்புகள்

1. இ. எஸ். வரதராஜய்யர், தமிழ் இலக்கிய வரலாறு (1-1100 A.D.), 1957, ப. 239.

2. அடியார்க்கு நல்லார் (உரை), சிலப்பதிகாரம், உ. வே. சா. பதிப்பு, 1960, ப. 512.

3. திருப்புகழ், கழகப்பதிப்பு, 1974, பாடல் 232.

4. ''சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்''

சிலம்பு., குன்றக்குரவை (தெய்வம் ராஅயது), பாடல் 8.

5. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 230.

6. செய்தியினைக் கூறியவர் : செல்வநாயகம், வள்ளியூர்.

7. மா. இராசமாணிக்கனார், மு. நூல், ப. 230.

8. கந்தபுராணம் (வசனம்), கழகப்பதிப்பு, 1973, பாயிரம், பாடல்கள் 7-12.

9. திருப்புகழ், கழகப்பதிப்பு, 1974, பாடல்கள் 439-454.

10. மா. இராசமாணிக்கனார், மு. நூல், ப. 230.

11. திருப்புகழ், 'குன்றுதோறாடல்' பற்றிய பாடல்கள்.

12. திருமுருகாற்றுப்படை, 317.

13. மா. இராசமாணிக்கனார், மு. நூல், ப. 233.

14. கி. பழனியப்பன், பழமுதிர்சோலை, விவேகானந்தா அச்சகம், மதுரை, 1961.

15. பரிபாடல், 15.

16. மேலது.

17. ஔவை சு. துரைசாமிபிள்ளை, பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள், கழகப்பதிப்பு, 1952, ப. 45.

18. மேலது, ப. 45.

19. மா. இராசமாணிக்கனார், மு. நூல், ப. 235.

20. மா. இராசமாணிக்கனார், மு. நூல், ப. 238.

21. கந்தபுராணம், பாயிரம், பாடல்கள் 7-12.

22. "That the Mantapam shall be known and called as solai-Malai Mantapam or Pulikkumichan Medu or Sambalputhur Mantapam, (Ex. A. 3, page 22) and not by any new name such as Pazhamuthir Solai" – Kallazagar Case, In the High Court of Judicature at Madras, Second Appeal 839 of 1962. Judgement dated 23. 10. 1967.

23. "There is no adequate evidence to ascertain the date of Ajjanandi in precision. But on consideration of palaeography of the epigraphs related to him, he might be assigned approximately to the age of the 8th and 9th century A.D." – P.B. Desai, Jainism in South India and some Jaina Epigraphs, 1957, p.63.

SHRI BALA SUBIKSHAM

RAMASUBRAMANIAN

Reference from

அழகர் கோயில்

தொ. பரமசிவன்



பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பழமுதிர்சோலை பற்றிய ஒரு விளக்கம்

[தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடான வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-2 (பக்கங்கள் 110-111)-ல் 'ஆறுபடை வீடு கள்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள குறிப்பினை சென்னை 'ராமா நுஜவாணி' ஆசிரியர் Dr. J. பார்த்தசாரதி அவர்கள் அனுப்பியுள் ளார். அதை அன்பர்கள் அறிவதற்காகக் கீழே தருகிறோம்.]

ஆறுபடை வீடுகள்

[வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-2, பக். 110-111]

சக்தி (பார்வதி)க்குரிய ஆறுபீடங்கள், சிவனுக்குரிய ஐந்து அம்பலங்கள், அட்டவீரட்டானங்கள், திருமாலுக்குரிய நவதிருப் பதிகள், எட்டு சுயம்வியக்த தலங்கள் போன்று முருகன் தொகைத் தலங்கள் ஆறுபடை வீடுகள்; பரங்குன்றம், அலைவாய் (திருச் செந்தூர்), ஆவினன்குடி (பழனி), ஏரகம், குன்று தோருடல், பழமுதிர்சோலை (அழகர் கோவில்) ஆகிய ஆறும். குன்று தோரு டலை விடுத்துத் திருத்தணியைச் சேர்த்துக் கூறும் வழக்கமும் உண்டு. முதல் மூன்று ஸ்தலங்களும் இன்றும் முருகன் கோயிலை உடையவை. குன்று தோருடல், பழமுதிர்சோலை ஆகிய ஸ்தலங்கள் பல ஐயப்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. .... குன்று தோருடல் என்னும் ஸ்தலம் எங்கு இருக்கிறது என்று இதுவரை யாராலும் கண்டறியப்படவில்லை.

நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையே ஆறுபடை வீடுகள் என்னும் கருத்துக்கு முதற்சான்ருகும் என்பதை ஆராய்ந்த டாக்டர் மா. ராசமாணிக்கம் பழமுதிர்சோலை எனப்படும் அழகர் மலையில் முருகன் கோயில் இருந்ததில்லை என்றும், 'பழமுதிர் சோலை மலை கிழவோனே' என்ற தொடர் திருமுருகாற்றுப்படை யில் எழுவாயாகவே வந்துள்ளது என்றும் கருத்துரைத்துள்ளார். அதுபோலவே 'குன்று தோருடல்' என்பதற்கு 'முருகன் மலை தோறும் ஆடல் கொண்டவன்' என்பது அவர் கொண்ட பொரு ளாகும். 'குன்று தோருடல்' என்ற தலைப்பில் அமைந்த திருப் புகழ்ப்பாடல்கள் ஐந்தும் 'பல குன்றிலும் அமர்ந்த பெருமாளே', 'பல மலையுடைய பெருமாளே', 'மலையாவையும் மேவிய பெரு மாளே', 'குன்று தோருடல் மேவு பெருமாளே' என்றே முடி கின்றன. இவற்ருல் 'குன்று தோருடல்' என்ற ஒரு முருகன் தலம் இருந்தது என வாதிட இயலாது. ....

முருகன் ஆறுபடை வீடுகளுக்குரியவன் என்ற கருத்துக்கு கி.பி. 14-ம் நூற்றுண்டுக்கு முன்னர் தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் இல்லை. (திருச்செந்தூர் பற்றிப் புறம் 55, பொதினி (பழனி) பற்றி அகம் 61, செந்தில், செங்கோடு, வெண்குன்றம், ஏரகம் (சிலப்பதிகாரம்-குன்றக்குரவை) பரங்குன்று (பரிபாடல், அகம் 59, முருகாற்றுப்படை—இம்மேற்கோள்கள் தனித்தனியே வந்தவை.)

படைவீடு-பாடிவீடு, போர்வீரர் தங்கியிருக்குமிடம். முருகன் அலைவாய் என்ற திருச்செந்தூரில் சூரபத்மனை அழித்ததால் அது படைவீடு என்னும் பெயர்க்குத் தகுதி பெற்றது. ஆனல் பரங் குன்று, ஆவினன்குடி, ஏரகம் ஆகிய இடங்களில் போர் பற்றிய புராணச் செய்தியே இல்லை. படைவீடு என்ற பெயர் இவற்றிற் குப் பொருந்தாது.

நக்கீரர் பாடிய ஆற்றுப்படையில் பரங்குன்றம், அலைவாய், ஆவினன்குடி, ஏரகம் ஆகிய நான்கும் அவர் காட்டிய ஆற்றுப் படைவீடுகளாகும். 'ஆற்றுப்படைவீடு' என்னும் சொல்லே வழக் கில் 'ஆறுபடை வீடு' எனத் திரிந்தது. அதனல் முருகாற்றுப் படையில் வரும் குன்று தோருடல், பழமுதிர்சோலை என்னும் இரண்டினையும் இரண்டு முருகத் தலங்களின் பெயர்களாகக் கருதும் நிலை ஏற்பட்டது. 'கந்தபுராண' ஆசிரியரின் காலமாகிய கி.பி. 14-ம் நூற்றுண்டில் இக்கருத்து உருவாகி, கி.பி. 15-ம் நூற்றுண்டில் அருணகிரிநாதரால் ஏற்கப்பட்டு மக்கள் நம்பிக்கை யோடு இணைந்து வளர்ந்து விட்டது. சங்க இலக்கிய காலந் தொட்டே தமிழ்நாட்டில் தொன்மையான முருகத் தலங்கள் பல உள்ளன; ஆனல் 'ஆறுபடை வீடுகள்' என்னும் கருத்து வர லாற்று அடிப்படையில் ஆனதன்று; மக்களின் நம்பிக்கையில் பிறந்ததாகும். 'கடவுளருக்குத் தொகைத் தலங்கள்' குறித்துப் போற்றும் பக்தி இயக்க மரபை ஒட்டியே இது எழுந்ததாகும்.

[இந்த நடுநிலையாளர்களின் இத்தீர்ப்பின்படி அழகர்மலையில் இரவோடிரவாக முருகன் கோயிலைக்கட்டி, அதற்குப் பழமுதிர் சோலை என்று பெயர்வைத்து, இன்றும் பரப்பிவருவது ஆக்ரமிப்பு மனப்பான்மையாலேயே என அனைவர்க்கும் விளங்கும். —ஸ்வதர்சனம் ஆசிரியர்]

வெளியிட்டிருக்கும் புதுக்கதையும் சமீப காலத்தில் ஏற்பட்ட கட்டுக்கதைகளேயாகும்.

G. சம்பத்குமார், மதுரை-7 (21, 22 கேள்விகள்)

21. திருச்சியில் ஒரு ஆஞ்சநேயர் கோவிலுக்குச் சென்றேன்; ஆஞ்சநேயர் சந்நிதிக்கு இருபுறத்திலும் பிள்ளையார் உருவம் சல வைக் கல்லில் வைத்துள்ளார்கள். அனுமார் கோவிலில் பிள்ளை யாரை வைத்திருப்பது சரியா? சிற்சில வைஷ்ணவர்கள் இல்லத் தில் பெருமாளுடன் பிள்ளையார் படத்தையும் வைத்திருக்கிறார்கள். பிள்ளையார் படம் இருந்தால் செல்வம் அதிகமாகும் என்று கூறுகிறார்கள். இது சரியா?

பெருமாளோடோ, அநுமனோடோ பிள்ளையாரைச் சேர்ப்பது ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தகாது. பிள்ளையார் படம் இருந்தால் செல்வம் அதிகமாகும் என்பது சைவர்கள் கிளப்பி விட்ட பெரும்புரளி. பிள்ளையார், சிவன் முதலானவர்களைத் தொழுகிறவர்கள் பலர் பிச்சை எடுப்பவர்களாகவும், ஏழை களாகவும் இருப்பதுகொண்டே இதைப் புரிந்துகொள்ள லாம். பணக்காரர்களாவதும், ஏழைகளாவதும் அவரவர் முன்செய்த வினையினால் ஆவது. படங்களை மாட்டிக்கொள்வ தால் மாத்திரம் செல்வம் குவிந்துவிடாது.

22. மதுரையை அடுத்துள்ள அழகர்மலையின் மேல் ஒரு முருகன் கோவில் உள்ளது. அழகர்மலையில் முதலில் முருகனே இருந்தார். பிறகு அழகர்பெருமாள் வந்து மலையைப் பெருமாள் கோவில் என்று மாற்றிவிட்டார்கள் என்று அய்யர் குலத்த வர்கள் கூறுவது உண்மையா?

சங்ககாலம் முதலாகவே அழகர்கோவிலில் பெருமாள் கோவிலே இருந்துவந்தது என்பதற்குப் பரிபாடல், ஆழ்வார் பாசுரங்கள் முதலான பல ஆதாரங்கள் இருக்கின்றன. சங்க இலக்கியங்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படையின் இறுதி யில் 'பழமுதிர்சோலைமலை கிழவோனே' என்று வருகிறது. இதைப்பற்றிக்கொண்டு பிற்காலச் சைவர்கள் பழமுதிர்சோலை என்பது முருகனுடைய ஆறு படை வீடுகளில் ஒன்று என்று சொல்ல ஆரம்பித்தார்கள். திருமுருகாற்றுப்படையை மாத்திரம் வைத்துக்கொண்டு பார்த்தால் அது முருகனின் தனிப்பட்ட தொரு கோயிலைக் கூறுகிறது என்றுகூடச் சொல்லமுடியாது.

பழம் உதிரும்படியான சோலைகளை உடைய மலைகளில் முருகன் விளையாடினான் என்றே நக்கீரர் கூறியிருக்கவேண்டும். ஒரு தனிப்படைவீட்டையே அது குறித்தாலும், பழமுதிர் சோலையைப் பற்றிய வர்ணனையில் மிளகுக்கொடிகள் இருந்த தாக வருவதால் அப்படைவீடு மிளகுக்கொடிகள் மலிந்த கேரளத்தில் இருந்திருக்கலாமேயொழிய. மிளகுக்கொடிகளே யில்லாத திருமாலிருஞ்சோலையாயிருக்க இடமேயில்லை. திருமாலிருஞ்சோலைமலையில் எக்காலத்திலும் முருகன்கோவில் இருந்ததுமில்லை. தற்போது முருகன்கோவில் இருக்கும் இடம் பெருமாள் எழுந்தருளும் ஒரு மண்டபமாகவே இருந்தது. இப்படியிருக்க. செல்வாக்குடைய அரசியல் தலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற திரு. பி. டி. ராஜன் முதலானோர் தூண்டுதலினால் இரவோடு இரவாக அந்த மண்டபத்தில் ஒரு முருகன்கோவில் கட்டப்பட்டது. இதற்கு அரசு அறநிலையத் துறையும் ஆதரவளித்தது. சமீபத்தில் பரமபதமடைந்த ஸ்ரீபெரும்பூதூர் யதிராஜ ஜீயர் மடாதிபதி ஸ்ரீமத் பரமஹம்ஸ பேரருளாள யதிராஜ ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி, தமது பூர்வா ச்ரமத்தில் வழக்கு தொடுத்து, அரும்பாடுபட்டு, சென்னை உயர்நீதி மன்றம் வரை போராடி, அழகர்மலையிலும், முருகன் கோவிலிலும் பதிக்கப்பட்டிருந்த 'பழமுதிர்சோலை' என்னும் பெயர்ப் பலகைகளை நீக்கும்படியும், அந்த முருகன் கோவிலை அழகர் மலைக்கு உள்ளடங்கிய ஒரு கோவிலாக ஆக்கும்படி யும் தீர்ப்புப் பெற்றார். இதற்குப் பல வருஷங்கள் போராட வேண்டியிருந்தது. இதற்கிடையில் பழமுதிர்சோலை என்னும் பெயர்ப்பலகையுடன் பல சினிமாப் படங்கள் காட்டப் பட்டுவிட்டன. இதைப்பற்றி ஏராளமான சினிமாப் பாட்டுக்க ளும் ஏற்பட்டுவிட்டன. இவ்வளவு நடந்த பின்பும். மறுபடி யும் அழகர்மலையில் நூபுரகங்கைக்கு அருகில் பழமுதிர்சோலை எனும் புதியகோவில் கட்டுவதற்குச் சைவர்கள் முயற்சிசெய்து வருகிறார்கள். கேள்வியில் கூறப்பட்டிருக்கும் பொய்ப் பிரசாரம் திடீரென்று அழகர்மலையை ஆக்கிரமித்தவர்களால் பரப்பப்படும் புரளியேயாகும். வைஷ்ணவர்கள் விழிப்புடன் இருந்து, மறுபடி யும் அழகர்மலையில் ஆக்கிரமிப்பு நடக்காமல் பாதுகாக்க வேண்டும்.